திரு. செ. செம்மலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தையின்போது ஆட்குறைப்பு செய்யலாமா என்று கூட நிர்வாகம் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தொழிலாளர்கள் என்னிடம் குறிப்பிட்டார்கள். அப்படி ஆட்குறைப்பு செய்வதைத் தொழிலாளர்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக உற்பத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக் கொடுக்கிறோம், அதற்காக உழைக்கிறோம். அதற்காக என்ன நிபந்தனை போட்டாலும் ஒப்புக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே பேச்சுவார்த்தையின்போது ஒரு சுமுகமான நிலைமை ஏற்படும் வகையில் ஆட்குறைப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கன்சிலியேஷன் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

(ஆ) கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 6-11-1986 அன்று கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் தீ விபத்து ஏற்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொடைக்கானலில் இயங்கும் கோடை அண்ணா பாலிடெக்னிக் ஒரு சுயநிதி ஆதாரப் பாலிடெக்னிக் ஆகும். அப்பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சேதப்படுத்தப்பட்ட பொருள்களுக்காக மாணவர்களிடமிருந்து ஈட்டுத்தொகை வசூலிக்கப்படலாகாது மாணவர்கள் விடுதியில் சாப்பாட்டுக் கட்டண நிலுவைத் தொகையினை செலுத்தாவிடினும் வாரியத்தேர்வுகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்படவேண்டும் என்ற சில கோரிக்கைகளை முன்வைத்து 23-10-1986 முதல் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கினர். இதுகுறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் உத்திரவின் பேரில் மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக்கின் முதல்வர் அந்நிர்வாகத்தினரிடம் கலந்து மாணவர்களுக்கு தேர்வுகளுக்கான நுழைவுச் சீட்டினை எந்தவித முன் நிபந்தனையும் இன்றி வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அப்பயிலகத்தில் பயிலும் மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு 3-11-1986

1986 நவம்பர் 21] [திரு. சி பொன்னையன்]

முதல் பயிலகமும், விடுதியும் திறந்து வைக்குமாறு நிர்வாகத்திடம் அறிவுறுத்தப்பட்டதின் பேரில், நிர்வாகமும் அதன்படியே 3—11—1986 முதல் பாலிடெக்னிக்கையும், விடுதியையும் திறந்து வைத்திருந்தது எனினும், மாணவர்கள் 4—11—1986 ஆம் தேதி காலையில் விடுதியில் சிற்றுண்டி தயார்நிலையில் இருந்தபோதிலும் அதனை சாப்பிட மறுத்து வெளியில் உள்ள உணவகங்களில் சிற்றுண்டியை எடுத்துக்கொண்டதாக தெரிகிறது. மேலும் அன்றைய தினமே தொடங்கிய (4—11—1986) வாரியத் தேர்வு களையும் மாணவர்கள் புறக்கணித்துள்ளனர். இதேபோல் 5—11—1986 6—11—1986 ஆகிய நாட்களில் நடந்த வாரியத் தேர்வுகளும் மாணவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

2. 6—11—1986-ம் தேதி சில விஷமிகளால் அப்பயிலகத்திற்கு தீ வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் 4—11—1986 மற்றும் 5—11—1986-ல் நடைபெற்ற வாரியத் தேர்வுகளை புறக்கணித் துள்ள நிலையிலும் 6—11—1986-ல் அப்பயிலகத்தில் ஏற்பட்ட தீ சம்பவத்தாலும் இதர நாட்களில் நடைபெறவிருந்த வாரியத் தேர்வுகள் நிறுத்தப்பட்டன. மேற்படி சம்பவங்கள் குறித்து அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

3. கொடைக்கானல், கோடை அண்ணா பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்களின் எதிர்கால நன்மையை கருத்தில்கொண்டு நிறுத்திவைக்கப்பட்ட வாரியத்தேர்வுகளை எதிர்வரும் டிசம்பர் திங்கள் 16, 17, 18 மற்றும் 19 தேதிகளில் நடத்துவதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு டுள்ளது. எனவே மாணவர்கள் தேர்வு எழுத முயற்சிகள் எடுக்கப் பட்டுவிட்டன. மேற்கூறப்பட்ட பாலிடெக்னிக் விவகாரங்களை விசாரணை செய்வதற்கு தொழில் நுட்பக் கல்வித்துறையால் 26—11—1986 அன்று ஒரு விசாரணை செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் நிர்வாகம் குறை சொல்லுகிறது வேறு, தவறு செய்யாத மாணவர்களையெல்லாம் வழக்கில் சிக்க வைத் துப் பழி வாங்க வேண்டும் என்று இத்தகைய தீ வைப்புச் சம்ப வத்தை நிர்வாகமே உருவாக்கியிருப்பதாக மாணவர் பிரதிநிதிகள் சொல்லுகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? எனவே மாணவர் கள்மீது போடப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியினுடைய மாணவர்கள், சேதப்படுத்தப்பட்ட பொருள்களுக்காக மாணவர்களிடமிருந்து ஈட்டுத்தொகை வசூலிக்கப்படலாகாது, மாணவர்கள் விடுதியில்

சாப்பாட்டுக் கட்டண நிலுவைத் தொகையினைச் செலுத்தா விடினும், வாரியத் தேர்வுகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட வேண்டும் என்ற சில கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத் தத்தைத்துவக்கினார்கள் என்ற சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வாகத்தின்மீது என்ன தவறு என்ற தகவல் அரசிடம் இல்லை. காவல் துறை இது குறித்து ஒரு வழக்கைப்பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகிறது. விசாரணையின் அடிப்படையில் உண்மை என்ன என்று கண்டறிந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதிக் கல்லூரி நடத்த உரிமை பெறுகிற போது நன்கொடை வசூலிப்பதில்லை என்று அந்த நிர்வாகம் உறுதியளித்து விட்டு பின்னர் மாணவர்களையே நன்கொடை வசூலிப்பதற்காக பிழிந்தெடுத்ததன் காரணமாகத்தான் இத் தகைய சம்பவம் அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படு கிறதே. எனவே சுய நிதிக் கல்லூரிகளையெல்லாம் அரசே மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று இன்னும் அறியப்படாமல் இருக்கிறது. தற்போது விசாரணை நடக்கிறது. விசாரணைக்குப் பிறகு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அவற்றை அரசே எடுத்துக் கொள்ளும் எண்ணம் தற்போது இல்லை. தவறுகள் எங்கெங்கே நடக் கின்றன என்று தகவல் வந்தால் அத்தகைய தவறுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்பவர்கள்மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழு தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.